ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2334/21 - 2023 මැයි මස 31 වැනි බදාදා - 2023.05.31

*2334/21 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்***

*102 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் "உண்ணாட்டு அரசிறைச் சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) 102 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் ஒப்புதலுடன், உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 102 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யத் தேவைப்படுத்தப்பட்ட ஆட்களின் மேலதிக வகுப்புகளானவை இந்த அறிவித்தலின் திகதியன்றுள்ளவாறு, மேலே கூறப்பட்ட 102 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆளொருவரைத் தவிர இதனகத்தேயுள்ள அட்டவணையின் பகுதி - அ அல்லது பகுதி - ஆ வில் குறிப்பிடப்பட்டுள்ள வதிவுடைய ஆட்களாக இருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*நிதி, பொருளாதார உறுதிப்பாடு*
*மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசியக் கொள்கைகள் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2023, மே 31.*

**அட்டவணை**

**பகுதி - அ**

*2023, யூன் 01 ஆந் திகதியன்று முதல் பயன்வலுப் பெறும் வகையில் :*

(i) *மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் கீழ் (105 ஆம் அத்தியாயம்) நிறுவப்பட்ட இலங்கை மருத்துவக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள்*

(ii) *1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினர்கள்*

(iii) *2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள்*

(iv) *1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள்*

(v) *இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள்*

(vi) *1976 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை கட்டடவியலாளர் நிறுவகச் சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை கட்டடவியலாளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள்*

(vii) *2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை கணிய அளவையாளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள்*

(viii) *இலங்கை உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்த வழக்கறிஞர்கள்*

(ix) *பிரதேச செயலகங்களில் தமது தொழில்களைப் பதிவு செய்துள்ள ஆட்கள்*

(x) *மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் தமது வாகனங்களை (முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கை டிராக்டர்கள் தவிர) பதிவு செய்துள்ள ஆட்கள்*

(xi) *2018, ஏப்பிரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் இலங்கையில் ஏதேனும் அசையாச் சொத்தை உறுதிப்பத்திரப் பரிமாற்றத்தின் மூலம் வாங்கியுள்ள அல்லது கையகப்படுத்தியுள்ள ஆட்கள்*

(xii) *ஏதேனும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொழில் வழங்குநர் மற்றும் பணியாளர் ஆகிய இரு சாராரிடமிருந்தும் மாதாந்த பங்களிப்புத் தொகையாக ரூபா 20,000/- இற்கு மேற்பட்ட தொகையைக் கொண்டுள்ள ஊழியரொருவர்.*

(xiii) *உள்ளூராட்சி நிறுவனமொன்றிடமிருந்து கட்டத் திட்டத்தற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் எவரேனும் ஆளொருவர்*

(xiv) *இலங்கையில் ஏதேனும் சேவையை வழங்குவதற்காக மாதமொன்றிற்கு ரூபா 100,000/- அல்லது பன்னிரண்டு மாத காலத்திற்கு ரூபா 1,200,000 கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளும் பிற எவரேனும் ஆளொருவர்*

**பகுதி - ஆ**

*2024, சனவரி 01 ஆம் திகதியன்று பயன்வலுப் பெறும் வகையில், பகுதி - அ விலுள்ள எந்த வகைப்பாட்டிலும் சேராத எவரேனும் தனியாள், மற்றும் :-*

(i) *2023, திசெம்பர் 31 ஆந் திகதியன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர், அல்லது*
(ii) *2024, சனவரி 01 ஆந் தியதியன்று அல்லது அதற்குப் பின்னர் 18 வயதை அடையும் ஒருவர், 18 வயதை அடைந்த பின்னர்.*

EOG 05 - 0268

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*